# தி. மு. க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

16 - ஆம் பக்கத் தொடர்ச்சி

துணை அமைப்பாளர்கள் - 1) ஒ.ஸ்டாலின் திருநகர், திருபப்ரங்குன்றம், மதுரை மாவட்டம். 2) ஆர்.எல்.ராமன் திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம். 3) சு.ரமேஷ் திருநகர், திருபப்ரங்குன்றம், மதுரை மாவட்டம். 4) சி.உதயக்குமார் திருநகர், திருபப்ரங்குன்றம், மதுரை மாவட்டம். 5) செ.நவநீதகிருஷ்ணன் பாண்டியன் நகர், திருநகர், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம்.

### திருமங்கலம் நகரம்

அமைப்பாளர் - மு.கார்த்திக் 56.கணபதி நகர், ராஜாஜி தெரு, திருமங்கலம், மதுரை 625706.

துணை அமைப்பாளர்கள் - 1) ரா.ரமேஷ்பாண்டி 46-51 ராமகொத்தன் சந்து, தெற்குத்தெரு, திருமங்கலம், மதுரை - 625706. 2) ரா.முனியாண்டி 201/79, முன்சீப் கோர்ட் ரோடு திருமங்கலம் மதுரை -625706. 3) அ.ரவீந்திரன் 101/9 இல்லம், செங்குளம், திருமங்கலம், மதுரை - 625706. 4) கா.சுந்தரேஸ்வரன் 17, அண்ணாநகர் 5 வது தெரு, திருமங்கலம், மதுரை 625706. 5) ச.சாய்ராம் 31/2 முகமதுஷாபுரம் 4 வது தெரு, திருமங்கலம், மதுரை - 625706.

### உசிலம்பட்டி நகரம்

அமைப்பாளர் - ரா. மாசாணம் இந்தியன் ஆயில் பின்புறம் தெரு, 7 வது வார்டு, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) இ.ஆண்டவர் கோழி வீரணத்தேவர் தெரு, கருக்கட்டான்பட்டி, 16 வது வார்டு உசிலம்பட்டி, மதுரை மாவட்டம். 2) பா.சரவணப்பாண்டி 7/6,கருக்கட்டான்பட்டி, 16 வது வார்டு, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம். 3) ஆ.விஷ்ணுகுமார் கருக்கட்டான்பட்டி 16 வது வார்டு, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம். 4) இ.வசந்தகுமார் கோழிவீரணத்தேவர் தெரு, கருக்கட்டான்பட்டி, 16 வது வார்டு, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம். 5) கா.பெருமாள் 1இ, வில்லாணிசாலை, பசும்பொன்தேவர் தெரு, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

### டி.கல்லுப்பட்டி பேரூர்

அமைப்பாளர் - கு.சுந்தரமூர்த்தி 15/3/65, தென்றல் நகர், தே.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) க.தங்கவடிவேல் 3/1/194டி, ராம் நகர். தே.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம். 2) ஞா. ஜெயசுந்தரபாண்டி 2/2/69, ராம் நகர், தே.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம். 3) ரா.வெங்கடேஷ்குமார் 15/6/117, கோகுல் நகர், தே.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம். 4) நா.முத்துக்குமரன் 2/26, கோகுல் நகர், தே.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.

### பேரையூர் பேரூர்

அமைப்பாளர் - ஈ.கார்த்திக் பேரையூர், பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) து. போத்திராஜா பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம். 2) ஆ. முகமது ரியாஷ்தீன் பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம். 3) து.முனீஸ்வரன் பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்.

### எழுமலை பேரூர்

அமைப்பாளர் - க.ரவி எழுமலை, பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) சி.கண்ணன் எழுமலை, பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம். 2) பொ.பிச்சைமணி எழுமலை, பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம். 3) மு.செல்வம் எழுமலை, பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம். 4) கு.சுரேஷ் எழுமலை, பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்.

### திருப்பரங்குன்றம் வடக்கு பகுதி

அமைப்பாளர் - ஆ.சரவணன் திருப்பரங்குன்றம் வட்டம், மதுரை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பா.ரவிக்குமார் திருப்பரங்குன்றம் வட்டம், மதுரை மாவட்டம். 2) செ.மணிகண்டன் திருப்பரங்குன்றம் வட்டம், மதுரை மாவட்டம். 3) வ.மீனாட்சிசுந்தரம் திருப்பரங்குன்றம் வட்டம், மதுரை மாவட்டம். 4) க.பாலமுருகன் பெரியரதவீதி, நிலையூர் ரோடு, திருப்பரங்குன்றம் வட்டம், மதுரை மாவட்டம் 5) ஜெ.அன்பரசன் 195, ஜே.ஜே.நகர், ஓம் சக்தி நகர், திருப்பரங்குன்றம் வட்டம். மதுரை மாவட்டம்

### திருப்பரங்குன்றம் தெற்கு பகுதி

அமைப்பாளர் - ப.பாலமுருகன் 64.அமைதிச்சோலை நகர், 3 வது குறுக்குத் தெரு, திருநகர், திருபப்ரங்குன்றம், மதுரை-6.

துணை அமைப்பாளர்கள் - 1) ஒ.ஸ்டாலின் 41ஏ, பசும்பொன் தெரு, திருநகர், திருபப்ரங்குன்றம், மதுரை-6. 2) சி.உதயக்குமார் 23, மாணிக்கம் நகர், திருநகர், திருபப்ரங்குன்றம், மதுரை-6. 3) கா. செந்தில்குமார் 7/1ஜி, ஜோசப்நகர், 3 வதுகுறுக்குத் தெரு, திருநகர், திருபப்ரங்குன்றம், மதுரை-6. 4) சு.ரமேஷ் 1/18, விளாச்சேரி ரோடு, திருநகர், திருபப்ரங்குன்றம், மதுரை-6. 5) செ.நவநீதகிருஷ்ணன் 101, சந்திரபாளையம், திருப்பரங்குன்றம், திருபப்ரங்குன்றம், மதுரை-5.

### அவனியாபுரம் மேற்கு பகுதி

அமைப்பாளர் - ச.கார்மேகம் அவனியாபுரம், மதுரை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பா.இருள்ராஜ் அவனியாபுரம், மதுரை மாவட்டம். 2) நா.ஆறுமுகம் வில்லாபுரம், மதுரை மாவட்டம். 3) ச.பாலமுருகன் வில்லாபுரம், மதுரை மாவட்டம். 4) க.முருகன் அவனியாபுரம், மதுரை மாவட்டம்.

**குறிப்பு: திருமங்கலம் தெற்கு ஒன்றியம், அவனியாபுரம் பகுதி பின்னர் அறிவிக்கப்படும்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 24-07-2025.

**டி.செங்குட்டுவன்**
செயலாளர்,
தி.மு.க அமைப்புசாரா ஓட்டுனர் அணி



நாமக்கல்லில் மேற்கு மண்டலம் மற்றும் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் கருத்தரங்கம், புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கழக துணை பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் செல்வராஜ், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலக்குழு மாநில தலைவர் ராமலிங்கம், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான கிருஷ்ணசாமி, தமிழன் பிரசன்னா சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி, மாநகராட்சி மேயரும் ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளருமான து.கலாநிதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பரமத்தி வேலூர் சட்டப்பேரவை தொகுதிக்கு உள்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பிடித்த மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு மற்றும் பரிசளிப்பு விழாவில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, திமுக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா கலந்து கொண்டு 224 மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவர் வெப்படை செல்வராஜ், கபிலர்மலை ஒன்றியச் செயலாளர்கள் சாமிநாதன், தளபதி சுப்பிரமணியம், வழக்கறிஞர் சரவணகுமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகிழ் பிரபாகரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நவலடி ராஜா, பூக்கடை சுந்தர், பேரூர் திமுக செயலாளர்கள் முருகன், சோமசேகர், கிளை நிர்வாகிகள் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியைகள், மாணவ, மாணவிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்..

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பொதுத் தேர்வில் சிறப்பிடம் பெற்ற 224 மாணவர்களுக்கு பரிசளிப்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி – தமிழன் பிரசன்னா வழங்கினர்!

*நாமக்கல், ஜூலை 30 -*

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பரமத்தி வேலூர் சட்டப்பேரவை தொகுதிக்கு உள் பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பிடித்த 224 மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

பரமத்தி அருகே திருமண மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும் / முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமை தாங்கினார். பரமத்தி ஒன்றியச் செயலாளர் பி.பி. தனராசு வரவேற்றார். மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவர் வெப்படை செல்வராஜ், கபிலர்மலை தெற்கு ஒன்றியச் செயலாளர் சாமிநாதன், வடக்கு ஒன்றியச் செயலாளர் தளபதி சுப்பிரமணியம், மத்திய ஒன்றியச் செயலாளர் வழக்கறிஞர் சரவணகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் திமுக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அரசு மற்றும் தனியார் பள்ளி அளவில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்த 224 மாணவ, மாணவிகளுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகிழ் பிரபாகரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நவலடி ராஜா, பூக்கடை சுந்தர், பேரூர் திமுக செயலாளர்கள் முருகன், சோமசேகர், கிளை நிர்வாகிகள் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியைகள், மாணவ, மாணவிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம், அரூர் கீரைப்பட்டியில் கழக தீர்மானக்குழு செயலாளர் கீரை.எம்.எஸ்.விசுவநாதன் (77)அவர்கள் உடல் நலக்குறைவால் மறைவெய்தினார். அவரது மறைவு செய்தி கேட்டு தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை அணிவித்து கழக இரு வர்ண கொடி போர்த்தி புகழ்வணக்கம் செலுத்தி அவர்களது குடும்பத்தினர்க்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் கே.மனோகரன், முன்னாள் மாவட்ட கழக செயலாளர்கள் செங்குட்டுவன், இ.ஜி.சுகவனம், மற்றும் சூடப்பட்டி.சுப்பிரமணி, டாக்டர் தருன்,அ.சத்தியமூர்த்தி, ச.ராஜேந்திரன், டி.எம்.அரயப்பன், பிசிஆர்.மனோகரன், கே.சென்னகிருஷ்ணன், கே.குமரேசன், சி.கிருஷ்ணகுமார்,என்.பி.பெரியண்ணன், ஏ.எஸ்.சண்முகம், எம்விடி கோபால்,பி.எஸ்.சரவணன்,வே.சௌந்தரராசு,வேடம்மாள், கோ.சந்திரமோகன், செங்கண்ணன், நெப்போலியன், முத்துக்குமார், பிரபுராஜசேகர், கே.பி.சக்திவேல், எஸ்.முனியப்பன், முல்லைரவி, வழக்கறிஞர். சந்திரசேகர், ஓவியர்.குப்பன், கு.தமிழழகன் மற்றும் கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

குன்னம் தொகுதியில் “சிவசங்கர் அறக்கட்டளை” மூலம்

# டி.என்.பி.எஸ்.சி. போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி மையம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் செந்துறையில் துவங்கி வைத்தார்!

*அரியலூர், ஜூலை 30 -*

அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறையில் தொகுதி மாணவ, மாணவியர்களின் எதிர்கால பயணம் நன்றாக அமைய வேண்டும் மாணவ, மாணவியர்கள் கல்வியில் நன்றாக படித்து வாழ்க்கையில் சிறந்து விளங்குவதற்காக தமது எஸ்.எஸ்.சிவசங்கர் அறக்கட்டளை மூலமாக போட்டித் தேர்வு (TNPC ) பயிற்சி முகாம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

அரசுப்பணி என்பது இங்கு பலருக்கும் ‘இலட்சிய வேட்கை’ நிறைந்த ஒன்று.

மாணவர்களுக்கு மட்டுமல்ல, பெற்றோர்களுக்கும் தம் பிள்ளைகள் எப்படியாவது படித்து அரசுப்பணியில் சேர்ந்து விட்டாலே போதும், அவர்களின் வாழ்வு பாதுகாப்பு நிறைந்ததாகி விடும் என்ற எண்ணத்தில் உழைத்துக் கொண்டிருப்பர்.

நகர்ப்புறத்தில் வசிக்கும் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் இதுகுறித்த விழிப்புணர்வு அதிகம் உண்டு. மாணவர்கள் பயிற்சி பெற, அங்கு பயிற்சி மையங்களும் நிரம்ப உண்டு.

ஆனால், கிராமப்புற மாணவர்களுக்கோ அதற்கான வாய்ப்பும் சூழலும் மிகக்குறைவு.

பெரு நகரிலுள்ள தனியார் பயிற்சி மையங்களில் வசூலிக்கப்படும் கட்டணத் தொகையே, சாமானியப் பெற்றோர்களை தலைசுற்றச் செய்யும். தவிரவும் கிராமப்புறங்களில் இருந்து பயிற்சி மையம் சென்றால், தங்கிப்பயில வேண்டியிருக்கும்.

பிள்ளைகள் படித்து பட்டம் பெறுவதற்குள்ளாகவே போதும், போதும் என்றாகி விடும் பெற்றோருக்கு. மேலும் மையங்களில் இணைந்து பயிற்சி பெற ஒரு தொகை. தங்கிப்பயில ஒரு தொகை எனும்போது அவர்களின் பொருளாதாரச் சுமை அதிகரிக் கும்.

குடும்பச் சூழலைக் கருதியே பலர் கல்லூரி படிப்பை முடித்து, கிடைக்கும் வேலையில் சேர்ந்து தங்கள் குடும்பத்தை கவனிக்கச் சென்று விடுவர். அவர்களின் இலட்சியமும், கனவாகிச் சென்றுவிடும்.

இதனையறிந்து அத்தகைய சூழலிலிருந்து தங்கள் பகுதி மாணவர்களை மீட்டு, அவர்களது வாழ்வை ஏற்றம் பெறச் செய்யும் “பெருமுயற்சியை” அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னெடுத்திருக்கிறார்.

தனது அறக்கட்டளை மூலமாக அரசுப் போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்களை தயார் செய்யும் பொருட்டு ‘TNPSC பயிற்சி மையம்’ ஒன்றை திறந்து வைத்தார்,

அதுவும், ஒரே நாளில் 2 பயிற்சி மையங்கள். பெரம்பலூர் மாவட்டத்தில் குன்னம் மற்றும் அரியலூர் மாவட்டத்தில் செந்துறை என 2 ஊர்களிலும் பயிற்சி மையம். இரண்டுமே மிகப் பின்தங்கிய பகுதி. இந்த பயிற்சி மையத்தில் மாணவர்கள் வந்து பயின்றால் போதுமானது. பயிற்சிக்கு கட்டணம் ஏதுமில்லை. அதேசமயம் தரமான பயிற்றுநர்களை கொண்டு, பயிற்சி அளிக்கச் செய்வது இதன் கூடுதல் சிறப்பு.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் என இரு மொழிகளிலும் கட்டணமில்லா ‘வினாவிடை வங்கித் தொகுப்பு கையேடு’.

பொதுத் தேர்வு எழுதும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கட்டணமில்லா ‘எழுது பொருட்கள் அடங்கிய தொகுப்பு’ கல்லூரி மாணவர்களுக்கு கட்டணமில்லா ‘கலைஞர் கணினி பயிற்சி மையம்’. கல்லூரி படிப்பை முடித்தவர்கள், போட்டித் தேர்வுக்கு தயாராக ஏதுவாக கட்டணமில்லா ‘TNPSC பயிற்சி மையம்’ என மாணவ, மணவியர்களுக்காக முன்னெடுத்துச் செல்லும் பணி ஒவ்வொன்றும் ‘ஒரு தலைமுறை மாற்றத்திற்கான புரட்சியாக செய்து வருகிறார்.

எளிய பிள்ளைகளின் கல்வி, வேலைவாய்ப்பு என இரண்டிற்கும் இணைப்புப் பாலமாகவும்,

பால்வாடி மாணவரிலிருந்து, பள்ளி கல்லூரி மாணவர்கள் என அவரைக் கண்டாலே போதும், சூழ்ந்து நின்று நேசத்தை பொழிகின்றனர்.

தமக்கு எத்தனை அலுவல் பணி இருந்தாலும், மாணவர்கள் மற்றும் இளைய சமுதாயத்தின் மீது பற்றுகொண்டு அவர்களின் இலட்சிய வேட்கையை நிறைவேற்ற ‘தலைமுறை மாற்றத்திற்கான புரட்சியை’ ஆராவாரமின்றி செய்து கொண்டிருக்கும் எஸ்.எஸ்.சிவசங்கர் எனும் ‘மாணவநேசன் அவர்களுக்கு அப்பகுதி பொதுமக்கள், பெற்றோர்கள் நன்றி கூறினர்.



தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்,நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி தலைமையில் இளைஞர் அணி ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.கூட்டத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ திட்டத்தில் இளைஞரணியின் செயல்பாடுகள், தெருமுனை சாதனை விளக்க கூட்டம் நடத்துதல், மற்றும் 2026 தேர்தல் களப்பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார். கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன், துணை அமைப்பாளர்கள் அசோக்குமார், ராஜகோபால், கே.ஆர்.சி.செல்வராஜ், கலைச்செல்வன், முத்தமிழ், கார்த்திக் மற்றும் இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர்.